1993 ஏப்ரல் 12]

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொன்னபடி, அரசாங்கம் துரிதமாக நடவடிக்கை எடுக்கும். இந்த அறிக்கையைப் பார்த்த உடனே கூட, நான் கேட்டேன். இவ்வளவு கால அவகாசம் கொடுக்கத் தான் வேண்டுமா, இன்னும் கொஞ்சம் குறுகிய காலத்திற்குள் முடிக்க முடியாதா என்று கேட்டபொழுது, இந்தக் கால அவகாசம் கொடுத்தால் தான் முடிக்க முடியும் என்று அவர்கள் தெரிவித்த காரணத்தினால் தான் இந்தக் கால அவகாசம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஏற்கனவே நான் சொன்னபடி, இவ்வளவு காலம் பொறுத்து இருந்தாகி விட்டது. அந்தப் பகுதி மக்களை சட்டமன்றத்தின் வாயிலாகக் கேட்டுக்கொள்ள விரும்புவது இந்தக் குறிப்பிட்ட பட்டியல்படி அவர்கள் செய்து முடிக்கவில்லை என்று சொன்னால் நிச்சயமாக அந்த நிர்வாகத்தின் மீதும், அந்தத் தொழிற்சாலையின் மீதும் கடுமையான நடவடிக்கையை மாசுக் கட்டுப்பாடு வாரியம் எடுக்கும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். எனவே, சட்டமன்ற உறுப்பினர் மணிமேகலை அவர்கள் எப்படிச் செய்து இருக்கிறார்களோ அதைப் போல, நீங்களும் கொஞ்சம் அரசின் சார்பாக இந்த நோட்டீசுகளைப் போட்டு, அரசாங்கம் இப்படிப்பட்ட நடவடிக்கைகளை எடுக்க இருக்கிறது என்பதையும், இந்தப் பட்டியலிலே பார்த்து இருக்கிறீர்களே அதைப் போட்டு, நீங்கள் இந்தப் பட்டியல்படி நடக்கவில்லை என்று சொன்னால் அதற்குப் பின்னாலே முடிவு எடுத்துக் கொள்ளலாம் என்று அந்த மக்களை நீங்கள் சமாதானம் செய்ய வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டு உரிய நடவடிக்கை விரைவாக மேற்கொள்ளலாம் என்பதைத் தெரிவித்து, இதை நிச்சயமாக நீங்கள் செய்வீர்கள் என்று நம்புகிறேன்.

(ஆ) பழவேற்காடு ஏரியின் முகத்துவாரத்தில் ஏற்பட்டுள்ள மணல் குவிப்பு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த கவன ஈர்ப்பு. திருமதி கே. மரியம் உல் ஆசியா, திரு. ஏ. ரவிக்குமார் ஆகியோரில் ஒருவர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார் திரு. ஏ. ரவிக்குமார்.

*திரு. ஏ. ரவிக்குமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''பழவேற்காடு ஏரியின் முகத்துவாரத்தில் ஏற்பட்டுள்ள மணல் குவிப்பு குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது குறித்த விவர அறிக்கை ஒன்று பேரவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை.

1974 ஆம் ஆண்டில் இதற்கு முன்பாக மழையின்மை காரணமாகவும், கடலின் கொந்தளிப்பினால் மணல் குவிக்கப்பட்டதாலும் பழவேற்காடு ஏரி, முகத்துவாரத்தின் எல்லையில் ஆறும் கடலும் கலக்கும் இடத்தில் அடைபட்டு போனது. அதற்குப் பின்னர் அடைபடவில்லை.

கடந்த மாதத்தில்தான் மறுபடியும் மழையின்மை காரணத்தாலும், கடல் அலைகளினால் மணல் குவிக்கப்பட்டதாலும், முகத்துவாரம் அடைபட்டுள்ளது. கடந்த 10 தினங்களாக (பௌர்ணமிக்கு பிறகு) சிறிதளவு பகுதி இறக்கப்பட்டு கடல் தண்ணீர் ஆற்றுக்கு வருகிறது. ஆயினும் இப்பகுதி மீனவர்கள் தொழில் செய்வதற்கு இந்த நீர்வரத்து போதுமானதாக இல்லை. மாண்புமிகு முதலமைச்சர் உத்தரவின்பேரில் மீன்வளத் துறை அமைச்சர் கால்நடை பராமரிப்பு (மற்றும்) மீன்வளத் துறை செயலர் மற்றும் துறை அதிகாரிகளுடன் 1—3—1993 அன்று பழவேற்காடு முகத்துவாரத்தை பார்வையிட்டு மணல் அகற்றி ஆற்றுப்பகுதியை மீண்டும் திறக்க மீன்வளத்துறை அதிகாரிகளுக்கு நேரடியாக அறிவுரை வழங்கப்பட்டது. இதன்படி விரைவான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது.

திரு. ஏ. ரவிக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது பொன்னேரி தொகுதியில் பழவேற்காடு ஏரியின் முகத்துவாரத்தில் மணல் அடைப்பு ஏற்பட்டு அதனால் மீனவர்களின் மீன்பிடி தொழில் பாதிக்கப்பட்டுள்ளது என்று கூறியவுடன், போர்க்கால அடிப்படையில் மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர் அவர்களைப் பாதிக்கப்பட்ட பகுதிக்கு அனுப்பி உடனடி நடவடிக்கை எடுக்கச் செய்த தமிழகத்தின் ஒப்பற்ற தலைவி, ஏழையெளிய மீனவ மக்களின் பாதுகாவலர் நமது இதயதெய்வத்திற்கு எனது தொகுதி மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, இதனுடைய திட்ட மதிப்பீடு எவ்வளவு? எவ்வளவு காலத்தில் இந்தப் பணிகள் நிறைவேற்றப்படும்? மேலும் நிரந்தரமாகத் தீர்வுகாண அரசிடம் ஏதாவது செயற்குறிப்பு உள்ளதா என்பதை அறிய விரும்புகின்றேன்.

பிற்பகல் 12-50

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழவேற்காட்டைப் பொறுத்த மட்டில் மணல் குவிப்பு கடந்த 10 ஆண்டுகளாக சிறிது சிறிதாக, அந்தப் பக்கத்திலே குவிப்பு ஏற்பட்டு, அதன் மூலம் தண்ணீர் வரத்து கடலிலிருந்து உள்ளே வர முடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டது.

இந்தப் பகுதியிலே இந்தப் பிரச்சினையைப் பொறுத்தமட்டில், நிரந்தரமாகத் தீர்க்கப்பட வேண்டும் என்பது அரசினுடைய நோக்கமாகும். அந்த வகையில், இந்தப் பகுதியில் பாதிப்பு ஏற்பட்டவுடன், நமது தமிழக முதல்வர், இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் உடனடியாக அங்கு சென்று பார்க்க வேண்டுமென்று பணித்தார்கள். அந்த அடிப்படையிலே அரசின் செயலாளர் மற்றும் கண்காணிப்புப் பொறியாளர் அவர்களோடு சென்று பார்த்ததிலே அங்கு இயற்கையைப் பொறுத்தமட்டிலே ஒரு இடத்திலே இந்த அடைப்பு எடுத்துவிட்டாலும் மறுபுறமாக அந்த அடைப்பு வரக்கூடாது, அந்த வகையிலே நிரந்தரமாக இந்தப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்பதற்காக, 'Centre for Water Resources' என்ற நிறுவனத்திற்கு எழுதி கேட்கப்பட்டு இது சம்பந்தமாக 9-3-1993 அன்று நேரிடையாக பழவேற்காடு பகுதிக்கு டாக்டர் ரமேஷ் அவர்களும் சென்று ஆய்வு நடத்தினார்கள். மேலும் விரிவான ஆய்வு செய்வதற்காக The Central Water and power research Station Kadakvasala—Poona-விலுள்ள இந்த Institute-க்கு எழுதி கேட்கப்பட்டிருக்கிறது. அவர்களும் விரைவாகவே இந்த இடத்திற்கு வந்து ஆய்வு செய்த பின்னர் ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டு, சிட்டதட்ட இந்தத் திட்டத்திற்கு மட்டும் 1.5 கோடியிலிருந்து 2.00 கோடி அளவிற்கு செலவழியும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் உத்தரவின் பேரிலே எவ்வளவு விரைவாக நடவடிக்கை எடுக்க முடியுமோ அந்த அளவிற்கு விரைவான நடவடிக்கை மிகச் சீக்கிரமாக எடுக்கப்பட்டு இந்தப் பிரச்சினை தீர்க்கப்படும் என்பதை இந்த நேரத்தில் தெரிவிக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி கே. மரியம் உல் ஆசியா.

திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழவேற்காடு ஏரியின் முகத்துவாரத்தில் ஏற்பட்டுள்ள மண் அடைப்பினை நீக்கினால்தான் கடலுக்கும் ஏரிக்கும் இடையே நீரோட்டம் ஏற்பட்டு அங்கே இறால் போன்ற வளர்ப்பு குஞ்சுகள் பொறிவதற்கு இயற்கையான சூழ்நிலை ஏற்படும். இப்படிப்பட்ட இயற்கைச் சூழ்நிலை ஏற்படாத நிலையில் இறால் குஞ்சுகள் பொறிப்பு பாதிக்கப்படுகிறது. பழவேற்காடு ஏரியைச் சுற்றியுள்ள மீனவர்கள் இதனால் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள். மண் அடைப்பை நீக்குவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த அறிக்கையிலே தெரிவித்திருக்கிறார்கள். பெங்களூரிலுள்ள மத்திய கடலோர பொறியியல் ஆய்வு மையத்தை தமிழக அரசு அணுகி முகத்துவாரத்தில் இது போன்ற மண் அடைப்பை, அடிக்கடி உண்டாகும் மண் குவிப்பினை தடுத்திட, நிரந்தர தீர்வு காணுவதற்கு அரசு ஆய்வு செய்யுமா என்றும்,

[திருமதி கே. மரியம் உல் ஆசியா] [1993 ஏப்ரல் 12

மேலும் எவ்வளவு நாட்களில் இப்படிப்பட்ட மையங்களை அணுகி அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது மீனவர்களை காக்கின்ற காவல் தெய்வமாக விளங்குகின்ற நம்முடைய ஒப்பற்ற முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இந்தப் பகுதியிலுள்ள பிரச்சினை குறித்து, எவ்வளவு செலவானாலும் பரவாயில்லை, இங்குள்ள மீனவர்களின் வாழ்க்கைப் பிரச்சினை இது என்பதற்காக பணத்தைப்பற்றியெல்லாம் கவலைப்படாமல், இதனை உடனடியாக நிறைவேற்றித் தருமாறு உத்தரவிட்டுள்ளார்கள். அந்த அடிப்படையிலே பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரு கின்றன. அதன் அடிப்படையிலே ஆய்வுகள் முடிந்த பின்பு உடனடியாக பணிகள் மிகக்குறுகிய காலத்திற்குள்ளே துவங்கப் படும் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

5. அறிக்கைகள் அளித்தல்.

பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைமுன் வைக்கப் பட்ட ஏடுகள் குழுவின் அறிக்கைகளை அளித்தல், திரு. ஆர். கோடிமாரி, பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் உறுப்பினர்.

திரு. ஆர். கோடிமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 1992-93ஆம் ஆண்டிற்கான பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் பதிமூன்றாவது, பதினான்காவது மற்றும் பதினைந்தாவது அறிக்கைகளை குழுத் தலைவரின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

6. மானியக் கோரிக்கைகள், 1993-94, விவாதமும் வாக்கெடுப்பும்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும், வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண். 35 பாசனம், பொதுப்பணித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பாசனம் பற்றிய 35-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 160,41,43,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.